Registered as a news paper. இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களை பொருத்தவும் மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் கிளிப் போடவும் நாடுங்கள்

எரிக் கணேஸ்

மூக்குக் கண்ணாடி அகமும் பல்கட்டுமிடமும்

564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 2222486

(சி-464) கிளை:- கொக்குவில், சுன்னாகம்.

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 14 (18.01.2003) சனிக்கிழமை இதழ் : 109



கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் பத்தாமாண்டு நினைவு நிகழ்வில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகின்றார் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன். அருகே தளபதிகளும் போராளிகளும்.

## கனடா, ஜேர்மன், ரஷ்யாவுக்கு விரைவில் புலிகள் செல்வர் !

### எரிக்சொல்ஹெய்ம் ஒஸ்லோவில் தெரிவிப்பு



கனடா, ஜேர்மன், ரஷ்யா, மற்றும் ஸ்கண்டிநேவியன் நாடுகளின் சமஷ்டிமுறை குறித்து ஆராய்வதற்கு- தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், மேற்படி நாடுகளுக்கு விரைவில், நேரில் விஜயம் செய்யவுள்ளதாக நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து, ஒஸ்லோவில் 30 நாடுகளைச் சேர்ந்த தூதுவர்களுக்கு விளக்கமளிக்கும் போதே அவர் மேற்படி தெரிவித்தார்.

இதன்போது அமெரிக்கா, சீனா, இந்தியா, ரஷ்யா, ஜேர்மனி ஆகிய நாடுகளின் தூதுவர்களும் கலந்து கொண்டனர்.

பாதுகாப்பு உபகுழு கலைக்கப்பட்டது குறித்து சொல்ஹெய்ம் கருத்துத் தெரிவிக்கையில் - பாதுகாப்பு உபகுழு கலைக்கப்பட்டது துரதிர்ஷ்டவசமானது. ஆயினும், இதனால் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



ஹக்கீம் நானா தளர்ந்து போயிருக்கிறது பேச்சிலேயே தெரியுது..

# அரசாங்கத்தையும் புலிகளையும் சமநிலையில் ஜப்பான் பார்க்கிறது

## விசேட தூதுவர் அகாஷி உறுதிபட அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கத்தைப் போலவே தமிழீழ விடுதலைப் புலிகளையும் சமமானமுறையில் ஜப்பான் நோக்குவதாகவும் , புலிகள் தமிழ்மக்களின் உரிமைகளுக்காகவே ஆயுதம் ஏந்திப்போராடியிருக்கின்றனர். அதனைப் பயங்கரவாதமாகச் சித்தரிக்கமுடியாது எனவும் ஜப்பானிய அரசின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி தெரிவித்துள்ளார்.**

ஜப்பானிய அரசின் விசேட பிரதிநிதியான யசூஷி அகாஷி, இலங்கையிலுள்ள பிரதான கட்சிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவதன் ஒரு கட்டமாக ஜே.வி.பியினரை நேற்றுச் சந்தித்தபோதே இக்கருத்தை அவர் வெளியிட்டார்.

இச் சந்திப்பில் ஜே.வி.பி சார்பில் விமல் வீரவன்ச, ரில்வின் சில்வா, அனுர திஸநாயக்க , பிமல் ரத்னாயக்க (10 ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியமர்வோருக்கு உதவிகள் உலகவங்கி - அரச அதிபர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் தெற்காசியாவிற்கான உபதலைவா மீகோ நிஷிமிசுவுடன் உலக வங்கிக் குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த் உலக வங்கிக் குழு, காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் இன்னமும் குடியமரவில்லையாம்

### அமைச்சர் ஹக்கீம் கூறுகின்றார்

யாழ்ப்பாணத்தில் 1990 ஆம் ஆண்டு வெளியேறிய முஸ்லிம் மக்கள் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரக் காரணங்களாலும் விடுதலைப் புலிகள் மீதுள்ள அச்சத்தினாலும் தற்பொழுது நிலவும் சமாதான சூழ்நிலையிலும் அங்கு சென்று மீளக்குடியமரவில்லை என, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்- ஜப்பானிய விஷேட பிரதிநிதி யசூஷி அகாஷியிடம் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே தலைமை, ஒரே இலட்சியம், ஒரே வழி இனி ஒரு போதும் பின்வாங்கத் தேவையில்லை



### அருட்தந்தை இம்மானுவேல் பொங்குதமிழில் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

"எங்கள் சொந்த மண்ணில், சொந்தக் காற்றைச் சுவாசிக்க எங்களை வாழவிடுங்கள் என்ற அடிப்படை உரிமையைத்தான் நாம் கேட்க விரும்புகிறோம்."

- இவ்வாறு நேற்றைய 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் பங்குபற்றி கருத்துரை நிகழ்த்தும்போது அருட்தந்தை இம்மானுவேல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சரியான சந்தர்ப்பத்தில், மக்களுக்குத் தேவையான, (10 ஆம் பக்கம் பார்க்க)



## எமது நிலம் எமக்கு வேண்டும் பொங்குதமிழ் எழுச்சி பிரகடனம்

(யாழப்பாணம்)

'நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காய் இராணுவம் தங்கள் வீடுகளுக்குச் செல்ல வேண்டும்' என பொங்குதமிழின் இரண்டாம் ஆண்டு நிறைவு நிகழ்வில் பிரகடனப்படுத்தப்பட்ட பொங்குதமிழ் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற மேற்படி நிகழ்வின்போது வெளியிடப்பட்ட பொங்கு தமிழ் பிரகடனத்தின் முழு விபரமும் வருமாறு.

தமிழீழ தாயகத்தின் பல்வேறு இடங்களில் பொங்கு தமிழை நடாத்தி முடித்த நாம், அங்குவாழ் மக்களின் பிரதிநிதிகளாக இங்கு கூடிநிற்கின்றோம். மனித உரிமைகளை மதிக்கும் சர்வதேசத்திற்கும், சமாதானத்தை விரும்பும் தென்னிலங்கை மக்களுக்கும் ஒரு செய்தியைப் பிரகடனப்படுத்த வேட்கை கொண்டுள்ளோம்.

தமிழர்களின் வளமான நிலங்களை சிங்களப் பேரினவாதிகள் ஆக்கிரமிக்க முனைந்தனர். விளைவாக யுத்தம் வெடித்தது. குரூரமான ஆக்கிரமிப்பிற்கெதிரான யுத்தத்தின் இடையில் எமது அபிலாசை மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம், சுயநிர்ணயம். அதை அங்கீகரித்து எமது ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று மீண்டும் (10 ஆம் பக்கம் பார்க்க)

# உணர்வெழுச்சியும் உறுதியும் மேவிய 'பொங்கு தமிழ்' எழுச்சி நிறைவு விழா

"எமது நிலம் எமக்கு வேண்டும்" என்ற கருப்பொருளில் பொங்குதமிழின் இரண்டாம் ஆண்டு நிறைவுநாள் நேற்று யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெற்றது.

நேற்றுமாலை 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் பரணிதரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொங்குதமிழ் எழுச்சிச் சுடரை கலாநிதி. சிதம்பரநாதன் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரினை- யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பாலசுந்தரப்பிள்ளை, அருட்தந்தை இம்மானுவேல், தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் நிஷாந்தன், பேராசிரியர் சிற்றம்பலம், கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் கெனடி, வவுனியா மக்கள் பிரதிநிதி மகிழ்ச்சிகரன், வன்னி மக்கள் பிரதிநிதி இளங்கோ ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தாயக விடுதலைக்காக உயிர் நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலிப்பாடல் இசைக்க, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் கலாநிதி சிதம்பரநாதன் பொங்கு தமிழ் எழுச்சி உரையாற்ற, மேடையில் இளைஞர் யுவதிகள் இணைந்து பொங்குதமிழ் எழுச்சிப் பாடலைப்பாடினர்.

இதன் போது இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் எழுந்து நின்று உணர்வெழுச்சி கொண்டு, பாடலுடன் தாமும் இணைந்து கொண்டனர்.

தொடர்ந்து, கடந்த காலங்களில் நடைபெற்ற பொங்குதமிழ் குறித்து மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதி கலாநிதி விக்னேஸ்வரன், வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதியான வவுனியா வளாக மாணவர் ஒன்றியத் தலைவர் ஜக்சன், மன்னார் மாவட்ட மக்கள் பிரதிநிதி சீலன், திருகோணமலை மாவட்ட மக்கள் பிரதிநிதி விக்னேஸ்வரன், வன்னி மாவட்ட மக்கள் பிரதிநிதி இளங்கோ மற்றும் வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த மக்கள் சார்பில் அருட்தந்தை இம்மானுவேல் அடிகளார் ஆகியோர் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

பின்னர்- பொங்குதமிழ் செய்தியினை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் வாசித்தார்.

தொடர்ந்து- பொங்குதமிழ் எழுச்சிப்பாடல் ஒன்றினை, அனைவரும் பெரும் உணர்வெழுச்சியுடனும் ஆக்ரோஷத்துடனும் தமது கைகளில் கட்டப்பட்டிருந்த சிகப்பு மஞ்சள் கொடிகளை அசைத்தவாறு பாடினர்.

அதன்பின்பு - பொங்குதமிழ் பிரகடனம் வாசிக்கப்பட, அதனை நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் உரத்த குரலுடன் பிரகடனப்படுத்தினர்.

அதன்பின்னர்- 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற பாடல் பாடப்பட, ஆர்வத்தோடு அனைவரும் உணர்வெழுச்சியுடன் தாமும் சேர்ந்து பாடினர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் கைகளில் சிகப்பு, மஞ்சள் கொடிகளைக் கட்டியிருந்தனர். கடந்த காலங்களில் தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் பொங்குதமிழை நடாத்திய ஏற்பாட்டாளர்கள், வடக்கு- கிழக்கின் அனைத்து மாவட்ட மக்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்களுடன் முஸ்லிம் சகோதரர்களும் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

(லி)






1.பேராசிரியர் சிற்றம்பலம் ஈகச்சுடர் ஏற்றுகிறார்.
2.பொங்குதமிழ் பிரகடனம் ஸ்ரீதரனால் வாசிக்கப்படுகின்றது.
3. நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்.
4.கலாநிதி சிதம்பரநாதன் எழுச்சியுரையாற்றுகின்றார்.
படங்கள்:- *லிவிங்ஸ்டன்*




5. பொங்குதமிழ் பாடல் உணர்வெழுச்சியுடன் பாடப்படுகின்றது.
6. கலந்து கொண்டோரும் உணர்வாக உரத்துக் குரல் எழுப்புகின்றனர்.


MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்!
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்!
* 40 வயதுக்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐ செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
* X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP
குறைந்த கட்டணத்தில்! விவரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்) ஆஸ்பத்திரி (முன்) வீதி, யாழ்ப்பாணம்.



வியாபாரம் பெருக விளம்பரம் செய்யுங்கள் நமது ஈழநாட்டில்



சிறு விளம்பரம்

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

டாஸோன் நாய்குட்டி விற்பனைக்கு. தொடர்பு 235/7 பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (208)

**பல் கட்டுதல்**

பல் கட்டுதல், பல் கிளிப்போடு தல் நல்ல முறையில் நியாயமான விலையில் மேற்கொள்ளவும், கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளை பெறவும் முடியும். (மொறாயஸ்), ஒளிச்சுடர் பல், மூக்குக் கண்ணாடி அகம், இல.05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம். (சி-439)



பதவி வெற்றிடங்கள்
விற்பனைப் பிரதிநிதிகள் / பயிலுநர்கள்
நீங்கள் பத்திரிகைத்துறையின் சந்தைப்படுத்தலில் பணிபுரிய ஆர்வமுடையவர்களா?
"நமது ஈழநாடு" உங்களை எதிர்பார்த்து நிற்கிறது!
தகைமைகள்:
* 30 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* சிறந்த தொடர்பாடல் திறன் மிக்கவராக இருத்தல் வேண்டும்.
* தனித்தோ/குழுவாகவோ செயற்படும் திறமை.
* பத்திரிகைத்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
* முன்னனுபவமில்லாதோர் பயிலுநராகக் கருதப்படுவர்.
* மாநகரசபை எல்லைக்குள் வதிவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
நீங்கள் தகுதியானவர்கள் எனின், கவர்ச்சிகரமான சம்பள அளவுத்திட்டங்களும், மேலதிக நிதிசார் நன்மைகளும் காத்திருக்கின்றன.
எமது சந்தைப்படுத்தல் பகுதியுடன் நீங்கள் இணைந்து கொள்ள இன்று சுயவிபரக் கோவையுடன் நேரில் அலுவலத்திற்குச் சமுகம் தரவும்
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P- 2225107, 2223922.
ஆளணி முகாமையாளர்,
நமது ஈழநாடு.



ராஜா
யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா
10.30, 2.30, 6.00,9.30
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும். (சி-398)



நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
ஜெயசூர்யா, காவ்யா நடித்த
என் மன வானில்
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.30 காட்சி
SPIDER MAN
(சி/397)


## இன்றைய நாள் இனிய நாள்

**18-01-2003 - சனிக்கிழமை**

**பூரணை விரதம்**

| | |
|---|---|
| **மேடம்** | :- பிரிவு துயர், தேகசுகம், பொருள்வரவு, தனலாபம் |
| **இடபம்** | :- மனபயம், திரவியலாபம், சிறைபயம், வியாதி, புத்திக்கேடு |
| **மிதுனம்** | :- நோய் பணவரவு, பகைமை, கவலை, தொழில்சிறப்பு, |
| **கர்க்கடகம்** | :- பிரயாணம், தேகசுகம், பொருட்சேதம், தனதானிய விருத்தி, |
| **சிங்கம்** | :- தனவரவு, பணச்செலவு, கலகம், கவலை, நன்மை |
| **கன்னி** | :- கேடு, திரவியலாபம், தனலாபம், மனக்கவலை, குடும்பசுகம் |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| **துலாம்** | :- சத்துரு பீடை, தொழில் ஸ்த்திரத்தன்மை, நோய், பிரயாணம், |
| **விருச்சிகம்** | :- மனக்கவலை, புத்திக்கேடு, சிறைபயம், நற்குணம், மகிழ்ச்சி |
| **தனு** | :- தேகபீடை, பகை, கெடுதல், ரோகபயம், மனக்கவலை |
| **மகரம்** | :- அதிகபிரயாசம், வெற்றி, தனவரவு, சுகக் குறைவு, களஸ்திரசுகம், |
| **கும்பம்** | :- பொருட்சேதம், காரியவெற்றி, மனபயம், மனக்கவலை |
| **மீனம்** | :- மகிழ்ச்சி, மனக்கிலேசம், தனலாபம், பொருள்வரவு, வாகனசுகம். |

# பாடசாலை செல்லும் சந்தர்ப்பத்தை இழந்த 65 ஆயிரம் தமிழ்ச் சிறார்கள்

## 200 பாடசாலைகளுக்கு அடிப்படை வசதியே இல்லை

(திருமலை)

வட-கிழக்குப் பகுதிகளில் யுத்த சூழல் நிலவிய 20 வருட காலத்தில் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய 65 ஆயிரம் தமிழ்ச் சிறார்கள் பாடசாலை செல்லும் சந்தர்ப்பத்தை இழந்து விட்டதாகக் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

திருகோணமலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், வட-கிழக்குப் பகுதியில் தற்போது 200 பாடசாலைகள் எந்த அடிப்படை வசதிகளுமே இல்லாமல் இயங்கி வருவதாகவும் தெரிவித்ததுடன், இப்பாடசாலைகளை உலக வங்கியின் ஒரு மில்லியன் ரூபா உதவியுடன் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, வட-கிழக்கிலுள்ள பாடசாலைகளை இவ்வாண்டிற்குள் புனரமைப்புச் செய்து, அவற்றைச் சீர்பட இயக்குவதற்கான முயற்சிகளில் தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அனுரசணையுடன் - வட-கிழக்கு மாகாணசபையில் கல்வியமைச்சு, ஆய்வரங்குகளை நடாத்தியமை தெரிந்ததே.

இந்த ஆய்வரங்குகளில் ஆராயப்பட்ட திட்டங்கள் இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மற்றுமொரு சிறுவனும் காய்ச்சலால் உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

சுதுமலையைச் சேர்ந்த மகேஸ்வரன் நிரோஜன் (வயது 10) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நீண்ட நாட்களாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்து, நேற்றுமுன்தினம் காலையே இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், மாலை 5 மணிக்கு அவர் உயிரிழந்ததாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ரா)

# திருமலை சிறான் இணைப்பாளர்; இணக்கம் ஏற்படுவதில் இழுபறி!

திருகோணமலை மாவட்ட சிறான் இணைப்பாளர் நியமனம் தொடர்பான முடிவுகள் எதுவும் எட்டப்படாமலேயே சிறான் கூட்டம் நேற்றுமுன்தினம் முடிவடைந்தது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறான் திட்டங்களைக் கண்காணிப்பதற்கென மாவட்ட இணைப்பாளர்களை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் சிறான் மேற்கொள்ளும் திட்டங்களைக் கண்காணிப்பதற்கென திட்ட இணைப்பாளர்கள் பொறுப்பாக நியமிக்கப்படவுள்ளனர்.

இந்த எட்டு மாவட்டங்களிலும் நான்கு மாவட்டங்களில் அரசதரப்பும், மிகுதி நான்கு மாவட்டங்களில் விடுதலைப் புலிகளுக்கும் திட்ட இணைப்பாளர்களை நியமிப்பர் என நேற்றைய சிறான் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்கிணங்க - அரசதரப்பு மன்னார், அம்பாறை, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் விடுதலைப்புலிகள் தரப்பு - மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் தாம் திட்ட இணைப்பாளர்களை நியமிக்கவுள்ளதாகக் கோரியிருந்தனர்.

ஆனால், திருகோணமலைக்கான சிறான் திட்ட இணைப்பாளர் நியமிப்பது தொடர்பான இறுதி முடிவுகள் எதுவும் நேற்றுமுன்தினக் கூட்டத்தில் எட்டப்படவில்லை. இது தொடர்பாக மேலதிக கலந்துரையாடல் எதிர்வரும் மாதத்திற்கான சிறான் கூட்டத்தில் தொடரலாம் எனத் தெரியவருகின்றது.

# இலங்கைத் தேசிய கீதம்; மாற்றிச் சீரமைக்க முயற்சி!

(கொழும்பு நிருபர்)

இலங்கை தேசிய கீதத்தினை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய கீதத்தினை அனைத்து இலங்கை மக்களுக்கும் உரித்தான ஒரு தேசிய கீதமாகச் சீர்திருத்தம் செய்யும் பணியில் அரச ஊடகம் ஒன்று ஈடுபட்டுள்ளது.

இதேவேளை, நீதி அமைச்சர் லொக்கு பண்டார - தேசிய கீதத்தினை எந்தக் காரணத்தைக் கொண்டும் மாற்றவோ அல்லது அதில் சீர்திருத்தங்கள் செய்யவோ முடியாது. இவ்வாறு தேசிய கீதத்தை மாற்றுவது சட்டவிரோதமானதெனத் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா - தேசிய கீதத்தினை யாரும் மாற்றினால் அல்லது ஏதாவது சீர்திருத்தங்கள் செய்தால், இந்தப் புதிய தேசிய கீதத்தினை முதலில் தான் கேட்க வேண்டுமெனவும், தான் இந்தத் தேசிய கீதம் சிறந்தது என அறிந்த பின்புதான் தேசிய கீதத்தினை மாற்றும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை - மாற்றியமைக்கபபடவிருக்கும் புதிய தேசிய கீதத்தினை பெப்ரவரி 4 ஆம் திகதி அன்று வெளியிட முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (01)

## பிராயச்சித்த அபிஷேகம்

(சரசாலை)

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலய பிராயச்சித்த அபிஷேகம் நாளை பகல் 12 மணிக்கு நடைபெறும். கடந்தகால யுத்த அனர்த்தத்தால் சேதமடைந்த ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (34)

# சின்னஞ்சிறு செய்திகள்

## தேசிய கல்வியியல் கல்லூரி வகுப்புகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரியில் 1 ஆம், 2 ஆம் வருட மாணவர்களிற்கான வகுப்புக்கள் இன்று 18 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

எனவே மாணவர்களும், விரிவுரையாளர்களும் தவறாது இன்று காலை 8 மணிக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## ஆசிரியர் சங்க யாழ்ப்பாண வலய உத்தியோகஸ்தர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 2003 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண வலய உத்தியோகத்தர் தெரிவு, சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் தெரிவு செய்யப்பட்ட வலய உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு.

தலைவர் - தி.கிருஷ்ணகுமார், செயலாளர் - மு.சுகுமார், பொருளாளர் - அ.அருந்தவநேசன், உபதலைவர்கள் - திருமதி பா.அழகுதாசன், மு.மகேந்திரன், உப செயலாளர்கள்- செல்வி வி.இரத்தினசிங்கம், கே. தெய்வேந்திரன் ஆகியோரே தெரிவாகினர்.

## மருத்துவபீட மாணவர் நிகழ்வுகள் இன்று தொலைக்காட்சியில்

யாழ்.மருத்துவபீட மாணவர்களினால் நடாத்தப்பட்ட மருத்துவ வாரத்தின் இறுதிநாள் நிகழ்வுகளின் தொகுப்பு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு 'ஐ' அலைவரிசையில் காண்பிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மருத்துவ மாணவர்களின் நாடகம், நடனம், இன்னிசை போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் விவசாய முயற்சி உதவி!

(மானிப்பாய்)

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமரும் குடும்பங்களின் நன்மை கருதி, அவர்களின் புனர்வாழ்வுக்கு உதவும் முகமாகப் பட்டினிக்கு எதிரான நிறுவனம் தனது பல்வேறுபட்ட உதவித்திட்டங்களில் ஒன்றாக விவசாய உபகரணங்களை வழங்கிவருகிறது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் பொருத்தமான குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கே இந்நிறுவனம் உதவிகள் வழங்க முன்வந்துள்ளது.

அந்தவகையில் தெரிவுசெய்யப்படும் இக்குடும்பங்கள் விவசாய முயற்சிகளை மேற்கொள்வதற்கு வசதியாக அவர்களுக்கு விவசாய உபகரணங்களான மண்வெட்டி பசளை வகைகள், விதைகள், கிருமிநாசினிகள் போன்றவற்றை வழங்கப்பட்டு வருகின்றன. (100)

## போக்குவரத்துக்கு சீர்செய்யப்படாத வீதிகள்!

(உடுத்துறை)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள வீதிகள் பல செப்பனிடப்படாத நிலையில் இருப்பதால், அவ்வீதிகளால் மக்கள் போக்குவரத்துச் செய்யும்போது பல இடையூறுகள் ஏற்படுகின்றன.

இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதையடுத்து 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்த நிலையில், அவர்கள் இவ்வீதிகளையே போக்குவரத்துக்குப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (117)

## அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

திருமதி கிருஷாந்தி இரவீந்திராவின் மாணவியும் ஏகபுத்திரியுமான செல்வி துஸ்யந்தி இரவீந்திராவின் பரத நாட்டிய அரங்கேற்றம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பத்மஸ்ரீ அடையாறு கே.லஷ்மணன் கலந்துகொள்ளவிருக்கின்றார்.

## இந்திய கம்யூனிஸ்ட்களுடன் ஜே.வி.பி. சந்தித்துப் பேச்சு!

ஜே.வி.பியினர் இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் பேச்சு நடத்தியுள்ளனர். கடந்த புதனன்று புதுடெல்கியில் நடைபெற்ற இச்சந்திப்பில் இருதரப்பு உறவு குறித்து ஆராயப்பட்டது. ஜே.வி.பி.தரப்பில் ராமலிங்கம் சந்திரசேகரனும், இந்திய மார்க்ஸிய கட்சியின் சார்பில் சீதாராம் யசூரியும் இதில் பங்குபற்றினர்.

## சுகாதார சேவை பணிமனை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சுகாதர சேவைகள் மாகாணப் பணிப்பாளர் பணிமனைக் கட்டடத்திறப்புவிழா இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை வீதியில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தினை வைத்தியக் கலாநிதி எம்.ஏ.எல்.றெஜி பெரேரா திறந்து வைக்கவிருக்கின்றார். (ச,கி)

## நாட்டுக் கூத்துக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் மாதாந்த கருத்தரங்கத் தொடரில், நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நாட்டுக் கூத்து தொடர்பான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

மன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில் "நாட்டுக்கூத்துப் பிரதியாக்கமும் மதிப்பீடும்" என்னும் பொருளில் கலாபூஷணம் பாஷையூர் தேவதாசன் கருத்துரை வழங்கவுள்ளார்.

# பாதுகாப்பு வலயக் குடியேற்றம் அடுத்த சுற்றுக்கு முன் இறுதி முடிவு

## அமைச்சர் பீரிஸ் கொழும்பில் அறிவிப்பு

விடுதலைப்புலிகளின் வானொலி சட்டரீதியானது. சமாதானச் சூழ்



நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக மக்களுக்கு விளக்கிக் கூறுவதற்குப் புலிகளுக்கு வானொலி அவசியமானது என அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர், புலிகஞ்க்கு வானொலிக்கருவிகள் அனுப்பியமை தொடர்பாக யாரும் கேள்வி எழுப்பமுடியாது என்றும் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலமைகள் ஸ்திரமாகவே இருக்கின்றன. மேலும் பாதுகாப்புக்கள் தீவிரப்படுத்தப்பட வேண்டுமானால் அதனை உடனடியாக செய்வதற்கு அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அடுத்த சுற்றுப்பேச்சுவார்த்தை அடுத்த மாதம் 7 ஆம் திகதி முதல் 10 ஆம திகதிவரை தாய்லாந்தில் நடைபெறும். அதற்கு அடுத்தசுற்றுப்பேச்சுவார்த்தையை ஜப்பானில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர், சமாதானப் பேச்சுவார்த்தை தீர்க்கமான கட்டம் ஒன்றிற்கு வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு இந்த ஆண்டு ஜூலை மாதம் ரோக்கியோவில் நடைபெறும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். இந்த மாநாட்டிலும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்று தெரிவித்த அமைச்சர், ரோக்கியோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் மூலம் இடைக்காலநிதி இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், பேச்சுவார்த்தையில் முரண்பாடுகள் இல்லையென கூறிவிடமுடியாது. ஆனாலும், முடியுமானவரை இணங்கிச் செல்லுகின்ற அல்லது விட்டுக்கொடுக்கின்ற பண்புகளை இருதரப்பும் கடைப்பிடிப்பதாகவும் தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அடுத்த சுற்றுப்பேச்சுக்கு முன்னர் அது குறித்து இறுதித்தீர்மானம் எடுக்கப்பட்டு விடும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (200)



பொங்குதமிழ் நிகழ்வில் இரண்டாம் வருட நிறைவையொட்டி தமிழீழ போராட்ட வரலாற்றுக் கண்காட்சித் திறப்பு விழாவின் ஆரம்பத்தில் தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றி வைப்பதை முதலாவது படத்திலும், வரலாற்றுக் கண்காட்சிக் கூடத்தினைக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கோபாலகிருஷ்ணஐயர் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், கண்காட்சியை நிகழ்வில் கலந்துகொண்டோர் பார்வையிடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். படங்கள் - கிருபாகரன்

# தமிழீழப் போராட்ட வரலாறு கண்காட்சி நேற்று ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

பொங்குதமிழ் பிரகடனத்தின் இரண்டாம் வருட நிறைவையொட்டி யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மண்டபத்திலே தமிழீழ போராட்ட வரலாற்றுக் கண்காட்சித் திறப்பு விழா நேற்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் க.பரணீதரன் தலைமையில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 11 மணியளவில் ஆரம்பமாகிய இந்நிகழ்வின் ஆரம்பத்தில், தமிழீழத் தேசியக்கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றி வைக்க, பொதுச் சுடரை களமுனைத் தளபதி லெப்.கேணல் சராஏற்றிவைத்தார்.

தொடர்ந்து, அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதன்பின்னர், மங்கள விளக்கினை பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதன், கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் வித்தி, வவுனியா பொது அமைப்புக்களின் பிரதிநிதி செ.விந்தன், மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் பிரதிநிதி சீலன், யாழ். மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன், யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் இலக்கியன், திருகோணமலை மாவட்ட மக்கள் பிரதிநிதி விக்கினேஸ்வரன், வன்னிப் பெருநிலப்பரப்பு மக்கள் பிரதிநிதி இளங்கோ மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் ஒன்றியத் தலைவர் கஜேந்திரன், பத்திரிகையாளர் டி. சிவராம் முதலானோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து, தமிழீழப் போராட்ட வரலாற்றுக் கண்காட்சிக் கூடத்தினைக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கோபாலகிருஷ்ணஐயர் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

ஏராளமான பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், போராளிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (கி,60)

# கல்வியியல் கல்லூரிக்கு மேலும் 90 பேர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரிக்கு அனுமதி பெற மேலும் புதிதாக 90 பேருக்கு அனுமதியளித்துள்ளதாக மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார அமைச்சின் தேசிய கல்வியியல் கல்லூரி களின் பிரதம ஆணையாளர் ஏ.சி.எம்.இப்ராஹிம் அறிவித்துள்ளார்.

அதன்படி ஆரம்பக் கல்விக்கு அறுபதுபேரும், சங்கீதத்திற்கு 13 பேரும், நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பத்திற்கு 17 பேரும் மேலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவிக்கப்பட்டுள்ளது.

# அமைதியை ஏற்படுத்தும் சந்தர்ப்பம் இலங்கை தவறவிட்டுவிடக் கூடாது!

## உலகப் புகழ்பெற்ற பொருளியல் நிபுணர் கருத்து

(கொழும்பு)

அமைதி மற்றும் நல்ல எதிர்காலத்தை உருவாக்குவதற்கான இறுதி வரலாற்றுச் சந்தர்ப்பத்தை இலங்கை தவறவிடக்கூடாது என்று உலகப் புகழ்பெற்ற பொருளியல் நிபுணரான ஜெப்ரி ஷொக்ஸ் தெரிவித்திருக்கிறார்.

கடந்த இருபது வருட யுத்தத்தினால் இலங்கை மிகப்பெரிய மனித வலுவையும், பொருளாதார வளத்தையும் இழந்துள்ளது. இதிலிருந்து மீள அமைதி முயற்சிக்கு, ஆதரவாக சர்வதேசசமூகமே இருந்து வருகிறது.

இன்று நடைபெறும் வரலாற்று நிகழ்வுகளை உலகம் அவதானித்து வருகின்றது. சமாதானத்தை நாடு முழுவதும் அனுபவிக்க வேண்டும். அப்போதுதான் முழுநாட்டுக்கும் உறுதியான எதிர்காலம் ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இவர் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டு கொழும்பு வந்தபோதே இதனைத் தெரிவித்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பலரையும் இவர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஜெப்ரி ஷாக்ஸ் - 2003 ஆம் ஆண்டுக்கான சிறந்த மனிதராக 'நியூஸ்வீக்' சஞ்சிகையால் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவர் றோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் 'இலங்கையை மீளக் கட்டியெழுப்புதல்' என்ற அறிக்கையை தாக்கல் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்ப் புலவர்கள் மாநாடு கொழும்பில்!

(மானிப்பாய்)

தமிழும், தமிழினமும் உலகப் புகழ் பெற வழிகாட்டியவர்கள் பண்டைக்காலம் முதல் வாழ்ந்த எம் ஈழத்து தமிழ்ப் புலவர்கள்.

இந்தத் தமிழ்ப் புலவர்களின் பணி வருங்காலத்திலும் தொடர்ந்து நிலைக்க உரிய வழிவகைகளைச் செயற்படுத்துவதற்கு ஈழத்துத் தமிழ்ப்புலவர்கள் மாநாடு நடைபெறவுள்ளது.

எனவே- ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள் போன்ற தமிழ் தகைமையாளர்கள்- தம்முடைய முழுப்பெயர், முகவரி, தமிழ்த் தகைமை, தொழில், ஆக்கங்கள் ஆகியவற்றைக் குறித்து-

தமிழவேள், 7/57 ஆம் ஒழுங்கை, கொழும்பு - 6 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

சைவத்தில் புலமை பெற்றவர்களும் இம்மாநாட்டில் பங்குபற்ற வழிவகை செய்யப்படுமெனவும், இந்த மாநாடு நடைபெறும் காலமும் இடமும் பின்பு அறிவிக்கப்படும் என்வும் தெரிவிக்கப்படுகிறது.

(100)

# நாவாந்துறை மோதல் போல இனி நடக்காது தடுக்க முயற்சி!

## இணக்கக் குழுவும் அமைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறையில் கடந்த சில தினங்களாக நடைபெற்ற கோஷ்டி மோதல் சம்பவம், கடற்தொழிலாளர் சமாசத்தின் தலையீட்டால் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளது.

இம்மோதல் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமுகமாக சம்பந்தப்பட்டவர்கள்ள அழைத்து, நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு மீனவர் சமாச அலுவலகத்தில் கூட்டமொன்று நடாத்தப்பட்டது.

மீனவர் சமாசத் தலைவர் தவரெட்ணம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு, யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், யாழ். பேராலய பங்குத்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம், நாவாந்துறைப் பங்குத்தந்தை பீற்றர் துரைரெட்ணம், சென். ஜேம்ஸ் பங்குத்தந்தை அ.ப. ஜெயசேகரம், ஜே/85, ஜே/84 கிராம அலுவலர்கள், பொலிஸ் அதிகாரிகள், யாழ். மாநகரசபை முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், மீனவர் சங்க உறுப்பினர்கள், மீனவர் சமாச ஊழியர்கள், யாழ். வலிகாமம் கடற்புலிகள் பொறுப்பாளர் இனியவன், மோதல்களில் சம்பந்தப்பட்டவர் தரப்பிலிருந்து பிரதிநிதிகளும், மக்களும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் இரு பகுதியினரும் தமது கருத்துக்களைப் பரிமாறி, இதுபோன்று எப்பிரச்சினையும் நடைபெறாமல் இருப்பதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பிலிருந்து 16 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இனிவரும் காலத்தில் எப்பிரச்சினை எழுந்தாலும், பங்குத்தந்தை ஊடாக- இக்குழுவுடன் தொடர்பு கொண்டு பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என இருதரப்பும் தீர்மானம் எடுத்துக்கொண்டனர்.

இம்மோதல் சம்பவத்தில் சொத்துக்களை இழந்தவர்களுக்குக் கொடுப்பனவுகளை வழங்கும் முகமாக, சென். நிக்கலஸ் பணிமனையில் நாளை 5 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும், சில நாட்களாக மீனவர்கள் மீன்பிடித் தொழிலிற்குச் செல்லாமையினால் நாளையிலிருந்து தமது தொழிலை மேற்கொள்ளவிருப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக, எந்த நடவடிக்கையையும் நீதிமன்ற சட்டத்திற்கு மீறி எடுக்கமுடியாது எனவும் கூறப்பட்டது.

(ரா)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

ஏழாவது அகவையில்.



பெயர் : ஸ்ரீ.திவாகரன்
முகவரி : சந்திரபுரம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

ஒன்பதாவது அகவையில்.



பெயர் : ம.சரண்ணியா
முகவரி : மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி:----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்



# சிறுவர் அரங்கம்

## உங்கள் கைவண்ணம்





**இ.விஜயநிதி,**
தரம் - 11 B,
யா/உடுவில் முருகமூர்த்தி
வித்தியாசாலை, உடுவில்.

**இரா.பிரேமசாயினி,**
தரம் - 11,
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய்.

## கொக்கும் மீன் குஞ்சும்

ஒரு கொக்கு இருந்தது. நல்ல அழகான கொக்கு. பஞ்சு போல வெள்ளை இறகுகள். நீளமான கால்கள். நீளமான சொண்டு. அது குளக்கரையில் அமைதியாக இருந்தது. யோசித்துக் கொண்டிருந்தது. குளத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. (மாணவர்



கள் எல்லோரும் ஒரு நிமிடம் மிகுந்த அமைதியாக இருத்தல்)

கொக்குப் பிள்ளைக்கு நல்ல பசி. நல்ல களைப்பு. காலையில் அது சாப்பிடவில்லை. அதன் கால்கள் நடுங்கியது.

அப்போது குளத்துத் தண்ணீர் ஆடியது. தண்ணீர் வட்டமாகச் சுழித்தது. ஒரு சிறிய மீன் குஞ்சு தலை நீட்டியது. தண்ணீருக்கு மேல் எட்டிப் பார்த்தது.

கொக்குப் பிள்ளை அதைக் கண்டார். மீன்குஞ்சைப் பிடிக்க நினைத்தார். 'எனக்கு நல்ல பசி' என்று கொக்குப் பிள்ளை சொன்னார். 'எனக்கும் நல்ல பசி' என்று மீன்குஞ்சு சொல்லியது. 'நான் அம்மாவிடம் போவேன்... அம்மா பசிக்கு உணவு தருவார்' என்று மீன்குஞ்சு சொல்லியது. தண்ணீருக்குள் அது ஓடி மறைந்தது.

- கலாநிதி சபா.ஜெயராசா.

## பழமொழிகள்

1. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது.
2. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
3. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி.
4. இளங்கன்று பயமறியாது.
5. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.
6. மோழிச் செல்வம் கோளை படாது.
7. கொல்லன் தெருவில் ஊசி விற்கலாமா?
8. அன்பான நண்பனை ஆபத்திலறிந்து கொள்.

**மா.நாகவதனி**
தரம் - 4,
தந்தை செல்வா தொ.நி.பள்ளி, தெல்லிப்பளை.

## வார்த்தை விளையாட்டு - 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | | | | ■ | ■ |
| | ■ | 2 | | 3 ப | |
| | 4 | ர | | | |
| 5 | ■ | | 6 கா | | |
| | ■ | 7 த | | | |
| 8 | ரி | | | | ■ |

**இடமிருந்து வலம்**

1. இறைவன் – ஒத்த சொல்.
2. துன்பத்தின் எதிர்ச்சொல்.
4. காய்கறிகளை இப்படியும் சொல்லலாம்.
6. இயமன்.
7. செய்தியை இப்படியும் கூறலாம்.
8. புன்னகை

**மேலிருந்து கீழ்**

1. கம்பியூட்டரின் தமிழ்ப்பதம்.
2. பகலுக்கு எதிரானது.
3. சூரியனுக்கு இன்னொரு பெயர்.
5. ஆசிய மக்களின் பிரதான உணவு.
6. குயிலின் முட்டையை அடைகாக்கும் பறவை.
7. தடுப்பு அல்லது அனுமதி மறுப்பு.

முழுப் பெயர் : ......................................
கற்கும் பாடசாலை : ......................................
கற்கும் தரம் : ......................................
முகவரி : ......................................

........................ ........................
கையொப்பம் திகதி

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக் குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 22-01-2003
சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 15

இல் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**மகேந்திரன் சசிதா**
சைவச் சிறுவர் இல்லம்,
ஏழாலை.

*2ஆம் பரிசு -*
**செல்வராசா கஜந்தன்**
அப்பிளானை, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

*3ஆம் பரிசு -*
**சாகினி நடராசா**
சித்திரமேழி,
இளவாலை.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

## வார்த்தை விளையாட்டு - 15 சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**
1. உலகம்
4. காது
5. தண்டனை
6. ரவை
9. அரி
11. ரணம்
12. கம்பன்

**மேலிருந்து கீழ்**
1. உத்தரவு
2. கண்டம்
3. உணவு
7. வைரம்
8. பணம்
9. கவரி

## கண்டுபிடியுங்கள்

தெருத்தெருவாகப் பெண்ணொருவர் முட்டை விற்று வந்தார். வீதி வழியாக வந்த சைக்கிள்காரர் ஒருவர் அந்தப் பெண்ணின் மீது மோதினார். பெண்ணின் கையில் இருந்த முட்டைக் கூடை கீழே விழுந்து அதிலிருந்த அனைத்து முட்டைகளும் உடைந்துவிட்டன. அந்தப் பெண்ணுக்குக் கூடையிலிருந்த முட்டைகளின் சரியான எண்ணிக்கை தெரியாது. இதனால் சைக்கிள்காரரிடமிருந்து அப்பெண்ணால் நட்டஈடு பெறமுடியவில்லை.

ஆனால், அந்தப் பெண் தரும் தகவலை வைத்து சைக்கிள்காரரிடம் நட்டஈடு பெறுவதற்கு நீங்கள் உதவி செய்வீர்களா?

இதுதான், அந்தப் பெண் தரும் தகவல். இரண்டிரண்டு முட்டைகளாக அடுக்கிய போது ஒரு முட்டை மீதியாக வந்தது. மூன்று மூன்றாக அடுக்கியபோது இரண்டு மீதி வந்தது. நான்கு நான்காக அடுக்கியபோது மூன்று மீதி வந்தது. ஐந்து ஐந்தாக அடுக்கியபோது நான்கு மீதியும், ஆறு ஆறாக அடுக்கிய போது ஐந்து மீதியும், ஏழு ஏழாக அடுக்கியபோது மீதம் இன்றியும் இருந்தது.

சரி, இப்போது அந்தப் பெண்ணின் கூடையில் எத்தனை முட்டைகள் இருந்தன என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

*(விடை மறுபக்கம்)*

# பிரான்ஸ்
## (French Republic)



*தலைநகர்:* பாரிஸ்,
*மக்கள் தொகை:* 59.5 மில்லியன்,
*பரப்பு:* 5,52,000 ச.கி.மீ.
*மொழி:* பிரெஞ்சு, வட்டார மொழிகள்.
*சமயம்:* கிறிஸ்தவம்
*நாணயம்:* பிராங்க்
*அரசு:* குடியரசு
*அதிபர்:* ஜாக்குவஸ் சிராக்
*பிரதமர்:* லியோனல் ஜோஸ்பியன்

எங்கே? மேற்கு ஐரோப்பிய நாடான பிரான்ஸ், வடகடல், அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் மத்திய தரைக்கடலில் கடற்பரப்பைக் கொண்டுள்ளது. இதன் வடக்கில் பெல்ஜியம் மற்றும் லக்சம்பர்க், வடகிழக்கில் மேற்கு ஜேர்மனி, கிழக்கில் சுவிஸ்சர்லாந்து மற்றும் இத்தாலி, தென் மேற்கில் ஸ்பெயின் ஆகியவை எல்லைகளாக அமைந்துள்ளன.

முக்கிய உற்பத்திகள்: விவசாயம், கால்நடைகள், கோதுமை, திராட்சை, உருளைக்கிழங்கு, அப்பிள், இரும்பு மற்றும் உருக்கு கெமிக்கல், கார், மின்னனுப் பொருட்கள் கனிமம்: இரும்புத் தாது.

முக்கிய நகரங்கள்: பாரிஸ், ஹோவர், வில்லி, நான்டிஸ்.

முக்கிய ஆறுகள்: ரீன், லோயர், ரோன்சீனே, காரோன், சாவோன்.



ஈபிள் டவர்

**கண்டுபிடியுங்கள் விடை - 119**

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267,நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..................................
கற்கும் பாடசாலை :..................................
கற்கும் தரம் :..................................
வீட்டு முகவரி :..................................
பிறந்த திகதி :..................................
ஆர்வமுள்ள துறைகள் :..................................
:..................................

................ திகதி ................ ஒப்பம்

................ அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ................ பெற்றோர் ஒப்பம்

## தாய்மை

பத்து மாதம் சுமந்து
பெற்றெடுத்து
சீராட்டிப் பாராட்டி
குருதியைப் பாலாக்கி
எமக்கு ஊட்டி
நோய் என்று வந்துவிட்டால்
இரவு என்று பாராமல்
கண்விழிப்பாள்
எம்மை உலகிற்கு காட்டி
உயர்த்தி விடுவாள் அன்னை
இதுவே தாய்மையும் ஆகும்.

**ஜெ.ஜெயசீதா**
தரம் - 9 B
யா/ வடமராட்சி மத்திய
மகளிர் கல்லூரி.



## MY PET

**My Pet is a Parrot.**
**I caught it in my Garden.**
**It is green Colour.**
**It's name is Pettamma.**
**I have a beautiful cage for my parrot.**
**It likes to eat fruits.**
**I have trained it to speak well.**
**It calls me by my name.**
**I play with my parrot every evening.**
**She loves me too.**

***S.Girisa,***
***J/Union college,***
***Year - 8.***

# விடுகதைகளும்

1. உயிரில்லாத நீதிபதி, ஒழுங்காய்த் தீர்ப்பு வழங்குகிறாள். அவள் யார்?
2. துக்கம் வந்தால் தானாக மூடும் கதவுகள். அவை எவை?
3. மெல்லியதாய் இருக்கும். தண்ணீரின் மேலேயே மிதக்கும். ஆயிரம் பேர் சேர்ந்தாலும் அதைத் தூக்க முடியாது. அது என்ன?
4. ஆகாயத்திற்கும் பூமிக்கும் ஒரேயொரு சங்கிலி. அது என்ன?
5. மரத்தில் காய்க்காத பழம். அது எது?
6. ஊரெல்லாம் சுற்றுவான், ஒரு துளி நீர் அருந்தமாட்டான். அவன் யார்?
7. கழுத்துண்டு தலை இல்லை. அது என்ன?
8. சிவப்பு நிறத்து சிங்காரி. நீரில் குளித்தால் கறுப்பாவாள். அது என்ன?
9. திரி இல்லாத விளக்கு. அது என்ன?
10. கால் இல்லாதவன். தள்ளாடியபடியே பயணம் செய்வான். அவன் யார்?

# விடைகளும்

1. தராசு
2. கண்ணிமை
3. நீர்க்குமிழ்
4. மழை
5. ஐஸ்பழம்
6. செருப்பு
7. போத்தல்
8. நெருப்பு
9. சூரியன்
10. படகு

**மெஸ்ரூன் நிஷா**
**தரம் 5 A,**
**ஆனைக்கோட்டை றோ.க.த.க.**
**பாடசாலை.**

# பாடசாலை

பாடம் கற்க உகந்த இடம் பாடசாலை.
பாலர்கள் செல்லும் இடம் பாடசாலை.
கல்வியைக் கற்க உகந்த இடம் பாடசாலை.
கற்கவே செல்லும் இடம் பாடசாலை.

அறிவின் அத்தாட்சி பாடசாலை.
அறிவுதனைப் பெறும் இடம் பாடசாலை.
ஆணி வேராய்த் திகழ்வது பாடசாலை.

சுதர்சினி மோகன்,
தரம் 9
கிளி/பாரதி வித்தியாலயம், பாரதிபுரம்.

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



*முழுப்பெயர்:-*
**லெனிங்ரன் லியோராஜ்**
*கற்கும் பாடசாலை :-*
யா/ மத்திய கல்லூரி.
*கற்கும் தரம் :-* 8
*ஆர்வமுள்ள துறைகள் :-*
இசை, மிருதங்கம், நாடகம், விளையாட்டு வர்ணனை.

*முழுப்பெயர்:-*
**ஸ்ரீஸ்காந்தன் ஷாரங்கன்**
*கற்கும் பாடசாலை :-*
யா/ புங்குடுதீவு மகா வித்தியாலயம்
*கற்கும் தரம் :-* 7
*ஆர்வமுள்ள துறைகள் :-*
விளையாட்டுத்துறை, ஆக்கத்துறை.





*முழுப்பெயர்:-*
**தர்மராஜன் சீர்மாறன்**
*கற்கும் பாடசாலை :-*
யா/ பரியோவான் கல்லூரி
*கற்கும் தரம் :-* 8
*ஆர்வமுள்ள துறைகள் :-*
சித்திரம் வரைதல், வானொலி கேட்டல்.

*முழுப்பெயர்:-*
**எட்லின் உதயராஜ் நிக்ஷன்**
*கற்கும் பாடசாலை :-*
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி.
*கற்கும் தரம் :-* 6
*ஆர்வமுள்ள துறைகள் :-*
வங்கித்துறை, கணினித்துறை.



*முழுப்பெயர்:-*
**தர்சனா சுந்தரலிங்கம்**
*கற்கும் பாடசாலை :-*
வவுனியா இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்.
*கற்கும் தரம் :-* 8
*ஆர்வமுள்ள துறைகள் :-*
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கல்வித்துறை.

*முழுப்பெயர்:-*
**இந்திரபவன் சயந்தன்**
*கற்கும் பாடசாலை :-*
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
*கற்கும் தரம் :-* 10
*ஆர்வமுள்ள துறைகள் :-*
வானொலி கேட்டல், கணினி.

*முழுப்பெயர்:-*
**கெங்காசுதன் நிரோஜினி**
*கற்கும் பாடசாலை :-*
யா/ மகாஜனக் கல்லூரி.
*கற்கும் தரம் :-* 8
*ஆர்வமுள்ள துறைகள் :-*
கலைத்துறை.

*முழுப்பெயர்:-*
**வில்லியம் அமல ஜெலஸ்ரீன்**
*கற்கும் பாடசாலை :-*
யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்.
*கற்கும் தரம் :-* 8
*ஆர்வமுள்ள துறைகள் :-*
ரீவி பார்த்தல், பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல், சித்திரம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது. - திருக்குறள்*

# நமது நோக்கு

## சிதைவு சீராகவேண்டும்!

யாழ்.மாவட்டச் சமூகக் கட்டமைப்பைப் பற்றிய பல்வேறு விமர்சனங்கள் எழுந்தாலும் - குடும்ப உறவுகளைப் பொறுத்தவரை நல்லதொரு உறவுநிலையைப் பேணுவதான பண்பே பன்னெடுங்காலமாக நிலவிவந்தது.

குறிப்பாக கணவன் - மனைவி உறவென்று பார்க்கும்போது - மிகவும் அந்நியோன்னியமான, எடுத்துக்காட்டான பிணைப்புகளுக்கு ஏராளமான உதாரணங்களை யாழ்.சமூகம் என்றைக்கும் தந்து வந்திருக்கிறது.

யாழ்.குடாநாட்டின் - கிராமப் பகுதிகளாயினும் சரி, நகர்ப் புறமாயினும் சரி - இந்த உறவுநிலை என்பது கௌரவமிக்க, மதிக்கத்தக்க, போற்றுதற்தக்க நிலையிலிருந்ததை எவரும் மறுக்க முடியாது.

கணவன் - மனைவி இருவரிடையே முரண்பாடுகளோ, சச்சரவுகளோ தோன்றினாலும்கூட - அந்த வேறுபாடு, அந்த வீட்டின் எல்லைகளைத் தாண்டாத ஒரு 'கிடுகு வேலி' கலாசாரமும் யாழ்ப்பாணத்தில் வேரூன்றியிருந்ததை எவருமே கண்டனர்.

யாழ்ப்பாணச் சமூகத்தை ஆராயப் புகுந்த சமூகவியலாளர்கள் கூட - இந்த இறுக்கமான கட்டமைப்பைப் பற்றிய ஆய்வுகளில், 'பிரச்சினைகளை ஒடுக்கியே வைத்திருக்கும்' பண்பு தெரிந்ததாக குறிப்பிட்டாலும் - தமது பிரச்சினைகளை ஒடுக்கி அல்லது வேறுவார்த்தைகளில் கூறுவதானால் - அப்பிரச்சினை பூதாகாரப்படுத்தப்படாமல் தடுத்துவிடும் மனோபாவம் மிகுந்திருந்ததை அவர்கள் சுட்டிக்காட்டவே செய்தனர்.

இவ்வாறானதொரு சூழலில் - நேற்றுமுன்தினம் கையில் கிடைத்த புள்ளிவிபரமொன்று - யாழ்ப்பாணத்தில் கணவன் - மனைவி உறவுநிலையில் ஏற்பட்டிருக்கும் மிகப்பெரும் பாதிப்பை முகத்திலடித்தாற்போல எடுத்துச் சொன்னது.

கடந்த இரண்டு வருடங்களில் யாழ்ப்பாணத்தில் - 130 விவாகரத்து வழக்குகளும், 116 தாபரிப்பு வழக்குகளும் பதிவாகியிருந்ததாக நீதிமன்றப் புள்ளிவிபரங்கள் தெரிவித்தன.

அதேவேளை - 1996ஆம் ஆண்டு முதல் 2000 ஆண்டு வரை பதிவான 231 விவாகரத்து வழக்குகளோடும், 150 தாபரிப்பு வழக்குகளோடும் ஒப்பிடும்போது - கடந்த இரண்டு வருடங்களில் - 2001, 2002 ஆம் ஆண்டுகளில் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை - பெரும் அதிகரிப்பென்றே கொள்ளமுடியும்.

சமூகவியல் ரீதியில் - இத்தகைய அதிகரிப்பு - அதுவும் உறவுநிலைகளைப் பாதிக்கும் விவகாரங்களில் காணப்படும் உயர்வு - மற்றைய துறைகளைப் போல எளிதில் இழிவுபடுத்திட முடியாததாகும்.

அதுவும் - முன்னரே குறிப்பிட்டது போன்று - யாழ்ப்பாணச் சமூகம் போன்ற, சூழ்நிலைகளை இறுக்கமெனப் பேணிய சமூகத்தில் - இத்தகைய பிரிவுகள் ஆர்முடுகலென அதிகரித்திருப்பது அவதானிக்கப்பட்டு, தீர்வுகாணப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

சீதனப் பிரச்சினை, தொழிலின்மை, வறுமை, கணவன் - மனைவி பிரிந்திருத்தல், உறவுகளால் பிரச்சினை, இடம்பெயர்வு போன்ற காரணங்களே இந்தப் பிரிவுகளுக்கு அடிப்படையென அடையாளங் காணப்பட்டன.

அதுவும் - சில விவாகரத்து வழக்குகள் திருமணம் நடந்து 4,5 மாதங்களுக்குள்ளேயே நீதி மன்றங்களுக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்த நிலைமைகளினடிப்படையில் - திருமண வாழ்வை ஆரம்பிப்பதற்குரிய புரிந்துணர்வும் சகிப்புத்தன்மையும் கணவன் - மனைவியிடம் காணப்படாததும் -

சீதனம் போன்ற நிராகரிக்கப்படவேண்டிய, ஆனால் பாரம்பரிய வலுமிக்க பொருளியற் காரணிகளின் மதிப்பிழந்து போகாத செல்வாக்கும் - வேறு புறக்காரணிகளும்,

திருமண பந்தத்திற்கு அச்சுறுத்தலாகியுள்ளதை உணர முடிகின்றது.

அதேவேளை - போர்ச் சூழலின் பின்னர் உருவான அல்லது வலுப்பெற்ற - தொழில் வாய்ப்பின்மை, இடம்பெயர்வு, கணவன் - மனைவி பிரிந்திருத்தல் என்பனவும் விவாகரத்துக்களுக்கு காரணமாகியுள்ளன.

இவை வெளிப்படையாகத் தெரியும் காரணிகளானாலும் கூட - இந்த விடயங்கள் மிக ஆழமாகவும், உணர்வுபூர்வமாகவும் ஆராயப்படவேண்டிய தேவை இன்று உருவாகியுள்ளது.

விவாகரத்துக்கள் பெருகிப்போன அல்லது சாதாரணமாகிப்போன சமூகமாக அடையாளம் கொள்ளாமல் - இப்பிரிவுகளைத் தணிக்கவேண்டிய அல்லது தடுக்கவேண்டிய பொறுப்பும் சகலருக்கும் உள்ளது.

பொறுப்பும் - பெறுமதியும் மிக்க பந்தத்தை தக்கவைக்கவேண்டிய கணவன் - மனைவி முதலாக - பிரிவுகளுக்கான காரணங்களைத் தூண்டும் ஊக்கிகள் வரை அனைத்துமே கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது இந்த வகையில் அவசியமாகின்றது.

ஏனெனில், அளப்பரிய பண்புகளும், செழுமையான எண்ணங்களும் கொண்ட கணவன் - மனைவியின் நீடித்த உறவே - ஆரோக்கியமான சமூகத்திற்கும், எதிர்காலச் சந்ததிக்கும் அடித்தளமானது என்பதை அனைவரும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

# யசுஷி அகாஷியுடனான சந்திப்பு ஜனாதிபதி இரத்துச் செய்தார்!



(கொழும்பு)

வட - கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புப் பற்றிய தேவைகளுக்கென ஜப்பானிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் விசேட தூதுவர் யசுஷி அகாஷியைச் சந்திக்கும் நிகழ்வை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இறுதிநேரத்தில் இரத்துச் செய்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த இந்தச் சந்திப்பு, திடீரென இரத்தானதற்கு அரசாங்கத் தரப்பிலிருந்து எவ்வித காரணமும் அறிவிக்கப்படவில்லை.

ஆனால் - தான் பங்குகொள்ளவேண்டிய அரசியல் கூட்டமொன்று இருப்பதால், சந்திப்பை - ஜனாதிபதி இரத்துச் செய்ததாக - யசுஷி அகாஷிக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.



இதேவேளை - அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, யசுஷி அகாஷியைச் சந்தித்துப் பேசினார்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளுக்குக் குறைவில்லாது தெற்கிலும் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் பிரச்சினைகள் உருவாகுமென்றும் - மகிந்த ராஜபக்ஷ - யசுஷி அகாஷியிடம் கூறியதாகத் தெரியவருகின்றது.

ஜப்பானின் உதவி பற்றி தெற்கிலுள்ளோர் சந்தேகங்களைக் கொண்டிருப்பதாகவும் அப்போது யசுஷி அகாஷியிடம் மகிந்த ராஜபக்ஷவினால் கூறப்பட்டிருக்கிறது.

# நாடு திரும்ப முயற்சித்த அகதிகள் தமிழகப் பொலிஸாரால் திடீர் கைது!

(சென்னை)

கடந்த சில நாட்களாகவே தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் பரவலாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

தகுந்த வதிவிட அத்தாட்சிகள் எதுவுமில்லாமல் இவர்கள் தங்கியிருந்ததாகவும் சட்டவிரோதமாக நாட்டை விட்டு தப்பிச்செல்ல முயன்றதாகவும் கூறப்பட்டு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகருக்கு அண்மையிலுள்ள புழல் அகதிகள் முகாமிலிருக்கும் சிலர், இராமேஸ்வரம் அருகேயுள்ள சேரன்கோட்டைப் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி கைதாகினர்.

இதேவேளை, வேறு சிலரும் நாகபட்டினம் பகுதியில் கைதாகினர்.

இவர்களில் - புழல் அகதிகள் முகாமைச் சேந்தவர்கள், தாம் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல முயன்றதாகத் தமிழகப் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இக் கைதுகளை அடுத்து கடற்கரை வழியேயான கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பெல்ஜியம் சமஷ்டிமுறை; எம்.பிக்கள் குழு ஆய்வு!

(பிரசெல்ஸ்)

சமஷ்டி ஆட்சிமுறை பற்றி ஆராய்வதற்கு வெளிநாடு பயணமாகியுள்ள அரசாங்க, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு, பெல்ஜியம் சமஷ்டி ஆட்சி முறை பற்றி அறிந்துகொள்வதற்கான மாநாடு ஒன்றில் கலந்துகொண்டது.

சுமார் 30 வருட காலமாக பெல்ஜியமில் உள்ள சமஷ்டி ஆட்சிமுறை, எந்தவித பிரச்சினையும் அற்றதாக இருப்பதை இந்த மாநாட்டின் மூலம் அறியமுடிந்தது என்று தூதுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

சிறிய நாடான பெல்ஜியத்துக்கு சமஷ்டி ஆட்சிமுறை சிறந்த வகையில் பொருந்துவதாக இலங்கை தூதுக் குழுவுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் அமைச்சர் ஜெயலத மேலும் தெரிவித்தார்.

வெளிவிவகாரம், பாதுகாப்பு, நிதி நிர்வாகம் தவிர்ந்த ஏனைய துறைகள் அனைத்திலும் அங்கு அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளதாக ஜெயலத் மேலும் குறிப்பிட்டார்.

# கந்தரோடையில் பௌத்த விகாரை; சமாதானத்தை சந்தேகிக்க வைக்கிறது

## வலி.தெற்கு பொது அமைப்புகள் - கண்காணிப்புக் குழுவிடம் புகார்

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதனைத் தொடர்ந்து நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளினால், சமாதானம் கிட்டும் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் வாழும் எமது மகளுக்கு, கந்தரோடையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் விகாரை அமைக்கும் முயற்சி பெரும் விசனத்தையும் சமாதானம் பற்றிய பேச்சுக்களில் சந்தேகத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளதென, வலி.தெற்கு பொது அமைப்புகளின் ஒன்றியம், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பேச்சுவார்த்தை நடைபெறும் இக்காலகட்டத்தில் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் வகையில் எமது மக்கள் எவ்வித செயற்பாடுகளையோ, போராட்டங்களையோ தவிர்க்கவேண்டும் என்று தங்கள் குழுவினர் எம்மத்தியில் பல தடவைகள் அறிவுறுத்தல்கள் வழங்கிவருகின்றீர்கள்.

ஆனால், எமது மக்களிடம் அமைதியையும் புரிந்துணர்வையும் சிதைக்கும் வகையில் ஒரு சிங்களக் குடியிருப்போ, பௌத்த குடிமகனோ இல்லாத ஒரு சிறிய கிராமத்தில் - புராதன வழிபாடுகள் அங்கு இருக்கின்றமையைச் சாட்டாக வைத்து, பௌத்த விகாரை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளமை அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் அடாவடித்தனம் என்பதனை தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறோம்.

நாம் பௌத்தத்திற்கு எதிரானவர்கள் அல்லர். பௌத்த தத்துவத்தை புரிந்துகொள்ளாதவர்களும் அல்லர். பொருத்தமற்ற நேரத்தில் மத உணர்வுகளை பேரினவாதிகளின் மத்தியில் ஏற்படுத்தி, பேச்சுவார்த்தையைக் குழப்பியடிக்கக்கூடிய ஒரு மறைமுகமான சூழலை உருவாக்கி வைத்திருக்க, அரசாங்கம் மேற்கொள்ளும் சதித்திட்டத்தின் ஓர் அங்கமே இச்செயற்பாடு என்று நாம் கருதுகின்றோம்.

தென்னிலங்கையில் உருவாகிவரும் பௌத்த சிங்கள பேரினவாதமே, சமாதானப் பேச்சுக்களை குழப்பியடிக்கக்கூடிய சக்தி என்பதனை யாவரும் அறிவர். கடந்த 50 ஆண்டுகளாக ஈழத்தமிழ் மக்கள் நடத்திவரும் விடுதலைப் போராட்டங்களின்போது, அரசாங்கத்தோடு அவ்வப்போது செய்துகொண்ட சமாதான ஒப்பந்தங்கள் யாவும், பௌத்த சிங்களப் பேரினவாதத்தால் கிழித்தெறியப்பட்டமையே வரலாறாகும். அதற்குத் தீனி போடும் அரசாங்கத்தின் இச்செயற்பாட்டை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

எமது மக்கள் எமது மண்ணிலேயே வழிபாட்டு உரிமை இழந்து நிற்கின்றார்கள். பாதுகாப்பு வலயமென்றும், இராணுவ வதிவிட வட்டமென்றும் கூறிக்கொண்டு, எமது புண்ணிய ஸ்தலங்களை, குலதெய்வங்களைச் சென்று வழிபடும் உரிமை இதே அரசாங்கத்தினால் மறுக்கப்படுகிறது. இந்த அடிப்படையில் மனித உரிமையே அற்ற அடிமைகளாக வாழும் எம்மத்தியில் வந்து, இவ்விகாரையை அமைப்பது எம்மை இழிவுபடுத்துவதாகவே அமைகின்றதுடன், விகாரை நிறுவப்படும் இடத்தைச் சார்ந்த மக்கள் மனச்சஞ்சலத்தோடும், பதற்றத்தோடும், பயப்பிராந்தியோடும் வாழுகின்றார்கள்.

இன்றைய நிலையைப் பயன்படுத்தி ஒவ்வொரு மதத்தினரும் இத்தகைய செயல்களில் ஈடுபட்டால், இனப் போராட்டத்துடன் மதப் போராட்டமும் இணைந்து கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும்.

எனவே, சமாதான நடவடிக்கைகளை அரசாங்கம் இதயசுத்தியோடு மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் வகையில் இவ்விகாரை அமைக்கும் செயற்பாட்டை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் - பிரதம மந்திரிக்கும், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இலங்கைக்கான நோர்வேத் தூதுவருக்கும், யாழ். அரச அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# ஈராக் மீதான அமெரிக்காவின் போராயத்தம்; உலகின் மனச்சாட்சி யார் பக்கம் பேசுகிறது?



புஷ் மற்றும் புட்டின்.

ஈராக்குடன் போர் என்ற அமெரிக்காவின் கொள்கைக்கு அமெரிக்காவில் மட்டுமல்ல முழு உலகத்திலும் எதிர்ப்பு அதிகரித்து வருகின்றது. ஆனால் உலக ஊடகங்களும், நம் நாட்டு ஊடகத்துறையினரும் போர் தயார்... போர் தயார்.., எனத் திரும்பத் திரும்ப வெளிப்படுத்தி வருகின்றன. போரை யார் விரும்பாது விட்டாலும் ஊடகங்கள் விடுவதாக இல்லை. போரில் யார் வெற்றி பெறுவதென்பது ஆயுதங்களாலும் ஆளணிகளாலும் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. நுட்பங்களாலும், தந்திரங்களாலும் கையாளப்படும் அணுகுமுறைகளாலும் போரை முன்னாயத்தத்துடன் தொடங்கவதாலுமே போர் வெற்றியை ஓர் நாடு அனுபவிக்க முடியும். அந்தவகையிலான போர் வெற்றிகள் மட்டும்தான் உலகின் சாதனைகள் என்று மட்டுப்படுத்தி விட முடியாது. போர் புரியாமல் விலகுவதனாலும் பல வெற்றிகளைப் பல அரசுகள் உலகில் அடைந்துள்ளன. அது போர் வெற்றியாக அல்லாதுவிட்டாலும் எதிரியைத் தோற்கடிப்பதில் வெற்றி கண்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதில் ஈராக் மீதான போர் எவ்வகை என்பதை இவ்வாரம் பரிசீலிப்போம்.

ஈராக் விவகாரத்தில் மீண்டும் உலகளாவிய ரீதியிலான எதிர்ப்பு தீவிரப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் எதிர்த்த சக்திகளுடன் மேலும் பல சக்திகள் இணைந்துள்ளன. மிக அண்மையில் ரஷ்யப் பிரதமர், ஈராக் மீது அமெரிக்கா தன்னிச்சையாகப் போர் தொடுத்தால் அது உலக அமைதியைப் பாதிப்பதாக மாறும் என எச்சரித்துள்ளார். இது ரஷ்யர்களின் முன்கூட்டிய எதிர்ப்பை மீண்டும் வலியுறுத்துவதாகவும், எச்சரிப்பதாகவும் அமைந்துள்ளது. ரஷ்யப் பிரதமரின் கருத்து மீண்டுமொரு பாரிய யுத்தத்திற்கு வழிவகுத்து விடுமா என்ற கேள்வியைப் பல அரசியல் அவதானிகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும், ரஷ்யாவால் அதுமுடியாது என வாதிடும் பிரிவினரும் இல்லாமலில்லை. இருந்தபோதும் கடந்த காலப்போர்களின் அனுபவங்களை முற்றாக நிராகரித்துவிடவும் முடியாது.

ரஷ்யா மட்டுமல்ல ஐரோப்பிய யூனியனும் தனது கருத்தை மீண்டும் வலியுறுத்திவிட்டது. ஈராக் மீது போர் தொடுப்பதைத் தாம் விரும்பவில்லை எனவும் ஆயுதக்கண்காணிப்பின் நடவடிக்கையைத் தொடர்ந்தே எதுவும் மேற்கொள்ள முடியும் எனக் கூறியுள்ளது. ஐரோப்பிய யூனியனின் இத்தீர்மானம் போருக்குத் திட்டமிடும் சக்திகளுக்குப் பெரும் பின்னடைவாகவே அமையுமெனக் கூறலாம். இதனால் ஏற்படப் போகும் நெருக்கடியை எதிர்கொள்வதற்கான முன்னாயத்தமாகவே ஐரோப்பிய யூனியனின் நடவடிக்கை அமைந்துள்ளது.

அமெரிக்காவின் கூட்டாளியான பிரித்தானியப் பிரதமர், பெரும் நெருக்கடி ஒன்றை அண்மையில் சந்திக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. தொழிற்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பாலானவர்கள் ஈராக் மீதான போருக்கு, "ரொனி பிளயர் ஒத்துழைப்பு வழங்கினால் தமது பதவிகளை ராஜினாமாச் செய்யப்போவதாக மிரட்டியுள்ளனர். இது தொழிற்கட்சிக்குள்ளும் பிரித்தானிய மக்கள் மத்தியிலும் எழுந்துள்ள உணர்வுகளைக் காட்டுகின்ற நடவடிக்கையாகும். பிரித்தானிய பெரும்பான்மை மக்கள் போரை விரும்பாத போக்கைப் பல கணிப்பீடுகளின் வாயிலாக வெளிப்படுத்தியிருந்தனர். பிரித்தானியாவில் எழுந்துள்ள நெருக்கடிகளையும், பிரச்சினைகளையும் முதலில் பிளயர் தீர்க்கட்டும் என்பதே அம்மக்களின் வாதமாகவுள்ளது. இதனால் பிரித்தானிய அரசாங்கம் ஏற்கனவே வளைகுடாவுக்கு அனுப்பிய படைகளையும், இனி அனுப்பவுள்ள படைகளையும் பற்றிய சர்சை பெரும் நெருக்கடியாக மாறியுள்ளது.

இறுதியாக ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் கோபி அனான்-மீண்டும் போருக்கான சூழலைத் தவிர்க்க முயல்வதைக் காட்டும் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றார். போர் நிகழாத நிலையிலும் ஈராக் விடயம் தீர்க்கப்பட முடியும் எனவும், ஆயுதக் கண்காணிப்புக் குழுவுக்கு ஈராக் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் கூறியுள்ளார். இதனால் போர் தவிர்க்கப்பட முடி

அவரது அணுகுமுறை எதுவும் உலகத்தின் மூலை முடுக்குகளில் வாழும் மக்களை வலிந்து கேட்டுப் பெறப்பட்ட உணர்வுகளல்ல. இயல்பாகவே தோன்றிய உணர்வுகளின் பிரதிபலிப்புக்களாகும். சதாம் பிரித்தானிய தொழிற்கட்சியினரைக் கோரவில்லை, ஐரோப்பிய யூனியனைக் கெஞ்சவில்லை - போருக்கு எதிராக செயற்படுங்கள் என்று. மாறாக, இவர்கள் இயல்பாகவே தமது எதிர்ப்புக்களை - சதாமுக்கும் அவரது அணுகுமுறைக்கும் ஆதரவாக மாற்றியுள்ளனர். ஐரோப்பிய ஆதிக்க உணர்வுகளுக்கு அப்பால் மக்களின் எதிர்ப்பு, போரை நிராகரித்ததாக அமைந்துள்ளது. பெரும்பாலான அமெரிக்கர்கள் போரை வெறுக்கின்றனர். அவர்களும் சதாமின் அணுகுமுறையை விரும்புகின்றனர். ஒருவகையில் கூறுவதாயின் போரை எதிர்ப்பவர்கள் என்ற வகையில் சதாம் ஹுசைனும், ஐரோப்பிய, அமெரிக்கப் பொதுமகனும் ஒரே திசையில் ஓடும் நதிகளாகின்றனர். இதுவே சதாம் ஹுசைனுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இச்சந்தர்ப்பத்தில் சதாம் ஹுசைனின் கொள்கையை மதிப்பீடு செய்யத் தவறக்கூடாது. சர்வாதிகாரி, குர்த்திஷ் மக்களைக் கொன்று



ஈராக்கின் தேசிய கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் முஹமட் அமீன் - ஆயுதக் கண்காணிப்பாளர்களின் ஒரு பக்கச் செயற்பாட்டைக் கண்டிக்கின்றார்.

டுள்ளார். அவரது பலவீனமான ராஜதந்திரமும், போரில் உபாயமின்மையும் - எடுக்கப்பட்ட முடிவை நிலையாகச் செயற்படுத்த முடியாத நிலைக்குள் தள்ளியுள்ளது. தற்போது அமெரிக்கத் துருப்புக்கள் மட்டும் ஒரு லட்சத்து இருபத்து ஐயாயிரத்தைத் தாண்டிவிட்டன வளைகுடாப் பிராந்தியத்தில். ஆனால், போர் ஆரம்பிக்கவில்லை. அடிப்படையில் அமெரிக்கர்கள் தனித்துப் போர் புரிய அச்சம் அடைகின்றனர். அதனால் ஏற்படும் பொருளாதார இழப்பீடுகளைக் கண்டு பயப்படுகின்றனர். எதிர்கால மாறுதல்களில் ஏற்படவுள்ள பொருளாதாரப் பாதிப்புகளை எண்ணிப் பல கூட்டுநாடுகளுடன் சேர்ந்து போரை நடாத்த விரும்புகின்றனர். அது, அமெரிக்க வல்லரசின் பலவீனமாகவே அமைகின்றது. அமெரிக்கா தனித்து எங்கேயும் போர் தொடுத்து வெற்றி கண்டவரலாறு அரிதாகவேயுள்ளது. முதலாவது ஈராக் யுத்தம், கொசாவா மீதான இராணுவ நடவடிக்கை, ஆப்கான் மீதான போர் என்பன எல்லாம் கூட்டான நடவடிக்கைகள் என்பதை மறந்து விட முடியாது. தற்போதைய யுத்தத்திலும் ஐக்கிய நாடுகள் சபையை முதன்மைப்படுத்தியது. ஆனால், அது தனது எதிர்பார்ப்பைத் தோற்கடித்த

பிடித்து வந்த - தவறான அணுகுமுறையால் - நெருக்கடியையும், உலகளாவிய எதிர்ப்பையும் சந்தித்து வருகின்றது. இது எதிர்கால அமெரிக்காவின் மீதான அவநம்பிக்கையை வலுப்படுத்துவதுடன், போருக்குப் பிந்திய அரசியலையும், மாறுதல்களையும் ஆபத்துமிக்கதாக ஏற்படுத்தும். அத்தகைய சூழலில் ஈராக்கோ, சதாம் ஹுசைனோ இல்லாதுவிட்டாலும் உலக மட்டத்தில் அவ்விடயம் அனுபவமாகப் பகிரப்படும்.

மிகப்பிந்திய தகவலாக ஈராக் இரசாயன ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஏவுகணைகளைக் கண்டுபிடித்துள்ளதாக ஆயுதக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ஈராக் அவ்வாயுதம் காலவதியானது என்றும், 1986 களில் தயார் செய்யப்பட்டு பயன்படுத்தாது கைவிடப்பட்டதாகவும் கூறுகின்றது. ஈராக் விடயம் புதிய திருப்பத்தினை உருவாக்கியுள்ளது.

அமெரிக்காவின் பக்கம் - வலுத்து வருவதிலும், ஆயுதக் கண்காணிப்பாளர்களின் அடுத்த கட்டப் பரிசோதனையிலும் மீதி தங்கியுள்ளது. ஐ.நா. சபை - ஈராக் உடன்படிக்கையை மீறுகின்றதா என்று விசாரணை செய்யத் தொடங்கி விட்ட



அமெரிக்காவின் பாரிய விமானந்தாங்கிக் கப்பலான யு.எஸ். எஸ். மிலியஸ், ஈராக்கிலிருந்து 20 மைல் தொலைவில் நங்கூரமிட்டிருக்கிறது.

யும் என அவர் நம்புகின்றார். அதாவது, போரைத் தவிர்க்க உலகளாவிய அமைப்பின் செயலாளர் விரும்புகின்றார் என்பதைவிடப் போருக்கான வாய்ப்பு ஈராக் பக்கமிருந்து எழவில்லை என்பதைக் காட்டுகின்ற நடவடிக்கையாகவே இது உள்ளது.

இதுவரையும் நோக்கிய அம்சத்திலிருந்து தெளிவாகின்ற விடயம்- ஈராக்கின் அணுகுமுறை உலகளாவிய மட்டத்தில் பேசப்படும் விடயமாக தெரிகிறது. ஈராக் போரை விரும்புகிறதோ? இல்லையோ? ஆனால், சர்வதேசமட்டத்தில் போரை ஈராக் நாடிச் செல்லவில்லை என்பதை தெரியப்படுத்த அது தவறவில்லை. அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் பலவீனமான அணுகுமுறை உலகம் முழுவதும் நிராகரிக்கப்படுவதாகவே மாறிவருகின்றது.

சதாம் ஹுசைன் தற்போது தோற்றுப்போகலாம் அல்லது ஈராக் அழிக்கப்படலாம். ஆனால், வெகுவிரைவில் அல்லது தற்போதே அமெரிக்க மேலாதிக்கம் சரிவடையத் தொடங்கிவிட்டது என்பது தெளிவாகிவிடும். இதுவே ஓர் அரசின் போர் வெற்றி அல்லது தோல்வி என்ற செய்தி தாங்கிச்செல்லும் விடயமாகும்.

சதாம் ஹுசைன் உலகின் பல லட்சக்கணக்கான மக்களின் விருப்புக்களைக் கொண்ட மனிதனாகக் காட்டப்படுகின்ற போக்கு, அவரது வெற்றியாகும். அமெரிக்காவை ஆளும் புஷ் பரம்பரைக்கே சவாலாகத் திகழும் ஒரு தனிமனித வலுவாகச் சதாம் விளங்குகின்றார்.

அழித்த கொடுங்கோன்மையாளன், தனது உறவுகளையே ஆட்சிக்கும் அதிகாரத்திற்காகவும் அழித்த மனிதன் என்ற குற்றச்சாட்டுக்கு முன்னால் - ஈராக்கையும், அதன் மக்களையும் வழிநடத்துவதில் அவர் காட்டும் தந்திரம் வியக்கவைக்கும் விடயமாகும். தற்போதைய சூழலில் போரைத் தவிர்க்க எடுக்கும் ஒவ்வொரு அடிக்கும் பின்னால் - பல பிரயத்தனங்களும், இழப்பீடுகளும், முன்னெழுந்தபோதும் அதனை எதிர்கொண்டு வெற்றிபெறுகின்ற ஆளுமைமிக்க தலைவனாக விளங்குகின்றார். ஒரு ஆசிய நாட்டவனாக, ஒரு இஸ்லாமியனாக சமகால உலகில் எழுந்து நிற்க முடியுமாயின் அது பெரும் சாதனையாகவே அமையும். குவைத் மீதான ஆக்கிரமிப்புக்கு மன்னிப்புக்கோரியதனால் இன்று அரபு நாடுகளின் உணர்வுகளைப் வென்றெடுத்துள்ளதுடன் ஒபெக், மற்றும் வளைகுடா நாடுகள் போரைத் தவிர்க்க முயலுகின்ற சூழலை ஏற்படுத்தியுள்ளார். அந்தவகையில் சதாம் சாதனையான ஆட்சியாளனாகக் காணப்படுகின்றார்.

கே.ரி.கணேசலிங்கம்

மறுபக்கத்தில் - அமெரிக்கா ஆளும் வர்க்கத்தின் பலவீனம் மேலும் மேலும் அபாயத்தை நோக்கிச் செல்கின்றது. உலக வல்லரசு-தனிவல்லரசு இன்னோர் அரசின் மீது போர் தொடுக்க முடியாது திணறுகின்றது. போருக்கான அனைத்தும் தயார். ஆனால், அமெரிக்க ஜனாதிபதி இன்னும் போர்ப் பிரகடனம் செய்யவில்லை, ஏன்?. செய்ய முடியாத சூழலுக்குள் அகப்பட்



பிரெஞ்சு அதிபர் ஷிராக்குடன் பேசும் ஐ.நா. ஆயுதக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ் மற்றும் உயரதிகாரிகளில் ஒருவர்.

தனால் பிரித்தானியாவைக் கூட்டுக்கு அழைத்துக் கொண்டது. அதுகூட தற்போது பிசுபிசுக்க ஆரம்பித்து விட்டது. இந்நிலையில் தனித்துப் போர் தொடுப்பது வழியென உணரும் அமெரிக்கப் பாதுகாப்புப் பிரிவு-சில நெருக்கடிகளை ஐ.நா. கண்காணிப்புக்குழுவுக்கும், ஐ.நா. சபைக்கும் கொடுக்க ஆரம்பித்துள்ளது. இதனால் ஏற்படவுள்ள புதிய சூழலைத் தனக்கு ஏற்ப பயன்படுத்தலாம் என உணர ஆரம்பித்துள்ளது.

முடிவாக, அமெரிக்க ஆளும் வர்க்கம் ஆரம்பத்திலிருந்து கடைப்

தாகத் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் போர் தவிர்க்கப்பட முடியாததாக மாறுகின்ற நிலையில் போருக்குள் ஏற்படவுள்ள அரசியலையும் அதன் சவால்களையும் பொறுத்ததாகவே ஈராக் விடயம் அமையலாம்.

ஆனாலும், ஐ.நா. சபை தற்போதும் போர் தவிர்க்கப்படலாம் எனக் கூறுகின்ற போக்கும் வலுப்பெற்று வருவதை உலக அரசியலினூடு காண முடிவதையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். ✪

### தென்பகுதி மக்களால் ஏற்பட்ட கிராக்கி

# 50 ஆயிரம் கிலோ பனை வெல்லம் இவ்வாண்டு உற்பத்தி இலக்கு!

தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பனம் பொருட்களை அதிகமாகக் கொள் முதல் செய்வதால், பனம் பொருட் களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள் ளது.

இதனால், இவ்வருடம் 50 ஆயி ரம் கிலோ பனை வெல்லத்தை உற்பத்திசெய்ய, யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கங்கள் தீர்மானித் துள்ளன.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களிடையே நடை பெற்ற கலந்துரையாடலிலேயே மேற் கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. (55)

## பட்டினிக்கெதிரான இயக்க வதிவிடப் பிரதிநிதி யாழ்.வருகிறார்

பட்டினிக்கெதிரான இயக்கத் தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி செல்வி கெதலின் இன்சு, குடாநாட் டுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இருதினங்கள் குடாநாட்டில் தங் கியிருக்கும் இவர், யாழ். மாவட்டத் தில் நிறுவனத்தினால் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங் கள் பற்றி ஆராயவிருக்கிறார்.

குடாநாட்டின் அபிவிருத்தி தொடர்பாக அரச அதிபரை சந் தித்து அவர் கலந்துரையாடவும் உள்ளார்.

## முரண்பாடுகளற்ற அரசியலை நாடாளுமன்றத்தில் நடத்தலாம்

### அரசும் எதிர்க்கட்சியும் திட்டம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அரசும் எதிர்க்கட்சியும் முரண்பாடுகளற்ற அரசியலை நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கின்றன.

இதன்பிரகாரம் நாடாளுமன்றக்குழு முறைமை ஒன்றை ஏற்படுத்துவற்கு பிரதம மந்திரி முடிவு செய்துள்ளார்.

இந்தக்குழு நாடு தொடர்பான பல்வேறு முடிவுகளைப் பெற்றுத்தர முடியும்.

- இவ்வாறு நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், திட்டமிட்டதன்படி நல்லாட்சி, தேசிய ஒருமைப்பாடு, சமாதானம், பொருளாதார விவகாரங்கள் தொடர் பான ஐந்து குழுக்கள் அமையும்.

ஐக்கிய தேசிய முன்னணி, புதிய அரசியல் கலாசாரத்தை விரும்புகின் றது. நாடாளுமன்றில், வெற்று அரசியல் முரண்பாடுகளைத் தாண்டிய விவகாரங்கள் தொடர்பான விவாதங்கள், கருத்துக்கள் இடம்பெற வேண்டும் என பிரதம மந்திரி தெரிவித்துள்ளார் என்றும் பீரிஸ் கூறினார்.

# பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை என்றுமில்லாதவாறு அதிகரித்து விட்டது

### மகளிர் விவகார அமைச்சர் கூறுகின்றார்

(கொழும்பு)

நாட்டில் சிறார்களுக்கும் பெண் களுக்கும் எதிரான பாலியல் வன் முறைகள் என்றுமில்லாதவாறு அதி கரித்து வருவதாக - மகளிர் விவகார அமைச்சர் அமரா பியசீலி ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது -

இத்தகைய பாலியல் வன் முறைகளைத் தடுக்காது விட்டால் சமூகத்திலேற்படும் சீர்குலைவுகள் எல்லை மீறிவிடும்.

பாடசாலைகள் முதல் பல்க லைக் கழகங்கள், பணியாற்றும் இடங்கள் என சகல இடங்களிலும் பெண்கள் மீதான பாலியல் வன்மு றைகள் அதிகரித்துள்ளன.

பாலியல் சார்ந்த திரைப்படங் கள், விளம்பரங்கள் என்பன நிலை மையை இன்னமும் சிதைத்து வரு கின்றன.

பாலியல் வன்முறைகளுக்கு ஆளானோர், தமது ஆயுட்காலம் முழுவதுமே மனக்காயங்களுக்குள் ளாகின்றனர், என்றும் அவர் தெரி வித்தார்.

## விவேகானந்தர் எழுச்சி விழா போட்டி முடிவுகள் வெளியாகின

சுவாமி விவேகானந்தர் எழுச்சி வாரத்தையொட்டிய கவிதை, பேச்சுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கவிதைப் போட்டி - முதலாம் இடம் - ச.அஜந்தாஜினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம் - வி. யாழினி (வேம் படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மூன்றாம் இடம் - க.கஜவதனி (சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு)

பேச்சுப்போட்டி - மேற்பிரிவு - முதலாம் இடம் - த.தயாபரன் (கொட்டடி), இரண்டாம் இடம் - இ.கேதாரசர்மா (யாழ்.இந்துக்கல்லூரி), மூன்றாம் இடம் - செ.கவிதரன் (சண்டிலிப்பாய்)

பேச்சுப் போட்டி - கீழ்ப்பிரிவு - முதலாம் இடம் - ர.சஸ்மிதா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாம் இடம் - சி.தவசீலன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

மேற்படி போட்டிகளில் கலந்து வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் கள் இன்று சனிக்கிழமை ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும் விவேகானந்தர் விழாவில் வழங்கப்படவுள்ளன.

## சிறுபணியாளர் சங்கக் கூட்டம்

யாழ்.மாவட்ட சிறுபணியாளர் சங் கக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு, அரசடி வீதி, நல்லூரில் உள்ள சங்கத்தின் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது என சங்கத்தின் தலைவர் செ. சந் திரகுமார் அறிவித்துள்ளார்.

மேற்படி சங்கத்தால் மேற்கொள் ளப்படவேண்டிய எதிர்காலத் திட்டங் கள் பற்றி ஆராயப்பட வேண்டியுள் ளதால், சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கு பற்றும்படி அவர் கேட்டுள்ளார்.

பல காலமாக செயற்படாது இருந்த இச்சங்கம், தற்போது மீண் டும் செயற்படத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(100)

# இந்தியத் துரோகத்தனம் தொடர்கிறதா? தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகம்

### கிட்டு நினைவுக் கூட்டத்தில் வவுனியா அரசியற் பொறுப்பாளர்

இந்தியா, தமிழ் மக்களுக்கு அன்று செய்த துரோகத்தை இன் னும் தொடர்ந்து கொண்டு இருக் கின்றது என, தமிழ்மக்கள் சந்தே கப்படுகின்றனர் என வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப் பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா குருமன்காடு கலைமகள் அரங்கில் நடைபெற்ற புலிகளின் மூத்த தளபதி. கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் பத்தாம் ஆண்டு நினைவு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எழிலன் மேற்படி தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - கடந்த காலங்களில் நாம் இனப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க முயற்சித்தபோதுதான் லெப். கேணல் திலீபன் மற்றும் புலேந்திரன், கும ரப்பா ஆகியோர் இந்திய அரசாங் கத்தினால் உயிரிழக்க நேரிட்டது. இதேபோல், கேணல கிட்டு உட்பட பத்து வேங்கைகளும் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வந்தபோது இந்திய இராணுவத்தி னரால் உயிரிழக்க நேரிட்டது.

இவ்வாறான சூழலில் இந்திய அரசாங்கத்தின் சில நடவடிக்கை கள், இன்றும் அத்தகைய துரோகத் தனம் தொடர்வதுபோல் உள்ளதோ என மக்கள் மத்தியில் சந்தேகங் களைத் தோற்றுவிக்கிறது என, அவர் தனது உரையில் தெரிவித் தார். (03)

## கேணல் கிட்டு நினைவு நிகழ்வுகளிலிருந்து...







நேற்றுமுன்தினம் திருவிலில் நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 10 ஆம் ஆண்டு நினைவுநிகழ்வில் கலந்து கொண்ட போராளிகள் உறுதி எடுத்துக் கொள்வதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சந்திரமோகன்)







வங்கக் கடலில் 1993 இல் சங்கமமான தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு மற்றும் 9 போராளிகளின் 10ஆவது வருட நினைவுதினம் நேற்றுமுன்தினம் திருகோணமலையில் சிறப்பாக அனுஷ்டிக் கப்பட்டது.

கேணல் கிட்டுவின் மாமியார் திருமதி ரெஜினா செரின் பொதுச் சுட ரினை ஏற்றி வைப்பதை முதலாவது படத்திலும், காட்சிக்கு வைக்கப் பட்டுள்ள மாவீரர்களின் திருவுருவப் படங்களை இரண்டாவது படத்திலும், அஞ்சலி செலுத்துவதற்கு காத்திருக்கும் மாணவர்களில் ஒருபகுதியினரை மற்றைய படத்திலும் காணலாம். (படங்கள் - கௌதமன்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாது; வெளிநாட்டுத் தூதர்களிடம் பீரிஸ்!

சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் பற்றுறுதியுடன் செயற்படுகின்றனர் என்று வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் விளக்கிக் கூறியுள்ளார்.

தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கொழும்பிலுள்ள ராஜதந்திரிகளுக்கு விளக்கிக்கூறும் கூட்டமொன்று நேற்றிரவு கொழும்பில இடம்பெற்றது. அங்கு உரைநிகழ்த்திய பீரிஸ், தாய்லாந்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பாக விளக்கிக் கூறினார்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு பெருமளவு நிதி தேவைப்படுவதாகவும் அதற்கு சர்வதேச நாடுகள் உதவி வழங்க வேணடும் என்றும் தெரிவித்த அமைச்சர், மீண்டும் ஒரு யுதம் இந்த நாட்டில் இடம்பெறாது என்றும் எடுத்துக் கூறினார்.

முரண்பாடுகளை இரு தரப்பும் பெரிதுபடுத்தவில்லை என்று தெரிவித்த அமைச்சர், எதிர்வரும் காலங்களில் இரு தரப்பும் ராணுவ ச[illegible] நிலையில் குறைப்புக்களை அ[illegible]லது ராணுவ ரீதியான செயற்பாடுகளை மட்டுப்படுத்துவது குறித்து பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

(200,01)

# அகில இலங்கை சதுரங்கம் யாழ்.மாணவன் சாம்பியன்!



அகில இலங்கை ரீதியில் தேசிய கழகங்களுக்கிடையிலான சதுரங்கப் போட்டியில் யாழ். சதுரங்க வீரர் சிவோதயன் வெற்றி பெற்றுள்ளார்.

முன்னர் இலங்கைச் சாம்பியனாக இருந்த நிரோஸ் டீ சில்வாவை 4 மணித்தியாலங்களின் பின் 69 ஆவது நகர்த்தலில் வெற்றிகொண்டார்.

நடைபெற்ற ஏழு சுற்றுக்களில் சிவோதயன் 54 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டார். சிவோதயன், யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவருமாவார்.

இவரது விசேட நேர்காணலொன்று 'நமது ஈழநாடு' விளையாட்டு அரங்கத்தில் வெளியானது தெரிந்ததே.

## கனடா....

சமாதானப் பேச்சுக்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படமாட்டாது. ஏனெனில், பாதுகாப்பு உபகுழுக் கூட்டங்களில் பேசவேண்டியவற்றை வட, கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின் கூட்டத்தின்போது பேசி முடிவு எடுக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

## அரசாங்கத்தை....

ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாடு ரோக்கியோவில் நடைபெறும்போது - ஜப்பான், வடக்கு, கிழக்குப் பகுதிக்கு நிதி உதவி வழங்குவதுபோல் தென்னிலங்கைக்கும் விசேட நிதியுதவியினை வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(01,200)

# ஒரே தலைமை...

விடுதலைக்குத் தேவையான, உலக முழுவதற்கும் உந்துசக்தியாக விளங்கும் இந்த 'பொங்கு தமிழ்' விழாவை நடாத்தி முடிந்திருக்கின்றமைக்கு அனைத்து புலம்பெயர்ந்த மக்களும் தமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

கடந்த காலங்களில் பல தமிழ் மக்கள், தமிழர் என்ற காரணத்தால் இந்தத் தீவிலிருந்து அடித்து, உதைக்கப்பட்டுக் கலைக்கப்பட்டனர். இதனால் எட்டு லட்சம் தமிழர்கள் இன்றைக்கு ஐரோப்பா, கனடா, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரினதும் பிரதிநிதியாகவே நான் இந்நிகழ்வில் கலந்துகொண்டுள்ளேன்.

புலம்பெயர்ந்தோர் மத்தியில் 'பொங்குதமிழ்' ஓர் இன்ப அதிர்ச்சியை, திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த 'பொங்கு தமிழ்' நிகழ்வு எங்களுடைய நீண்ட விடுதலைச் சரித்திரத்தில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், நீண்டகாலமாகப் பிரிந்து வாழ்ந்த தமிழ்த் தலைவர்கள், தங்கள் தன்னிச்சைப்படி தன்னலத்துடனும் வாழ்ந்த அவர்கள் - உங்களுடைய முயற்சியால் - ஒரே குரலாக தமிழருக்கு என்று ஓர் தாயகம் இருக்கிறது. தமிழருக்கு என்று ஒரு பூமி இருக்கிறது என உரத்துக் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

நாங்கள் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை. ஏனெனில், மக்கள் ஒன்றாகச் சேர்ந்துவிட்டனர். எமது இலட்சியம் ஒன்றாகிவிட்டது. எமது வழியும் ஒன்றாகிவிட்டது. எமது தலைமைத்துவம் ஒன்றாகிவிட்டது.இங்கு வாழ்ந்தாலும் சரி, அங்கு வாழ்ந்தாலும் சரி தமிழினம் அனைத்தும் ஒன்றாகவுள்ளது.

எமது மண், எமது சொந்த மண - நாங்கள் வாழும் மண்ணாக வரும் வரை நாம் மௌனமாக இருக்க முடியாது - என்றார்.

# எமது நிலம்...

மீண்டும் கூறினோம்.

இன்று பேச்சுவார்த்தை நடக்கின்றது. நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

வீடுகளுக்கு திரும்பிச்சென்று இயல்பான வாழ்க்கை வாழவேண்டும் என இடம்பெயர்ந்து வாழும் மக்கள் விரும்புகிறார்கள்.

வழியை மறிக்கிறது இராணுவம்.இனக்கொலைகளில் இருந்து தப்பி நிலைக்க, தமிழர்களுக்கு பலமாக விளங்கிய ஆயுதங்களை ஒப்படைக்குமாறு நிபந்தனை விதிக்கின்றது.

தமிழர் தலைமையை பயங்கரவாதிகள் என மீண்டும் அழைத்துப் பார்க்கின்றது.

இராணுவத்தின் இச்செயல் சிங்களப் பேரினவாதத்தின் உள்மனப் படுக்கைக்குள் ஆக்கிரமிப்பின் ஆசைகள் உறங்கிக் கொண்டிருப்பதையே காட்டுகின்றது என நாம் சந்தேகிக்கிறோம். இராணுவத்தின் இச்செயல் எமக்குப் பிடிக்கவில்லை.

சிங்கள இனமும் தமிழினமும் சரிநிகர் சமானம் என ஏற்றுக்கொள்கின்ற ஒரு சமாதான வாழ்விற்கு நாம் முழு ஒப்புதலை அளிக்கிறோம். அதேவேளை, ஒன்றை மிகத் தெளிவாகக் கூறுகின்றோம்.

ஆக்கிரமிப்பின் சின்னமான இராணுவம் தமிழீழத் தாயகத்தில் நிலைகொள்வதை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம். இராணுவம் எம்து நிலத்தைவிட்டு விலகிச் சென்றே ஆகவேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்வதற்காய் இராணுவம் தங்கள் வீடுகளுக்குச் செல்லவேண்டும்.

எமது மூதாதையர் கால்பரப்பித் திரிந்த மண்ணில், எமது பிஞ்சுப் பாதங்கள் பதிந்து மறைந்த எமது நிலம் எமக்கு வேண்டும்.

எமது எதிர்கால சந்ததியின் இன்பவாழ்விற்காய் எமது நிலம் எமக்கு வேண்டும். தமிழர்களின் ஆழமான இந்த அபிலாஷையை, நமது நெஞ்சில் சுடர்விடுகின்ற இந்த சுதந்திர வேட்கையை இவ்வுலகம், புரிந்துகொள்ளவேண்டும். நிலையான சமாதானத்திற்கு இது அத்தியாவசியமாகும் என்று இச்சபையில் கூடிநின்று நாம் பிரகடனப் படுத்துகிறோம்.

உயர்ந்தவர்கள் நாம் எல்லோரும்
உலகத்தாய் வயிற்று மைந்தர்.
நசிந்து இனிக் கிடக்கமாட்டோம்
நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்.

# ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு பெப்ரவரியில் நியமனம் கிடைக்கலாம்!

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அகில இலங்கை தமிழராசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இதன்படி பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் இந் நியமனங்களுக்கு விரைவில் கிடைக்கும் எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் இந்நியமனங்கள் தொடர்பான அனுமதியை பெற கல்வி அமைச்சின் செயலாளர் நாணயக்கார, திறைசேரியின் பணிப்பாளர் சரித்த ரத்வத்தைக்கு கடிதம் எழுதியுள்ளார் எனவும்,

இக்கடிதத்திற்கான பதில் கிடைத்ததும், வடக்கு - கிழக்கு பிரதேசங்களிலுள்ள ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு, பெப்ரவரி மாதம் முற்பகுதியில் நியமனம் வழங்கப்படும் எனவும், வடக்கு, கிழக்கு கல்வியமைச்சின் துணைச் செயலாளர் திசநாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே, மாசிமாத முற்பகுதி வரை வடக்கு,கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் அதற்குப் பின்பும் நியமனம் கிடைக்காவிடில் வட-கிழக்கு தழுவிய போராட்டங்களை நடாத்துவோம் எனவும், அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயல[illegible]ளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

## சமய அறிவுப்போட்டி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு நடாத்தும் 2002 ஆம் ஆண்டுக்கான சமய அறிவுப்போட்டிப் பரீட்சை முன்னர் அறிவித்தபடி நாளை முற்பகல் 9.30 மணிக்கு வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நிலையங்களிலுள்ள பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

## யாழ்ப்பாணத்தில்....

ஜப்பானிய விசேட பிரதிநிதி யசுஷி அகாஷிக்கு நேற்று பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தனது வாசஸ்தலத்தில் வழங்கிய விருந்துபசாரத்தின்போதே - மேற்படி கருத்தை ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் பற்றி கருத்து தெரிவித்த யசுஷி அகாஷி - எதிர்வரும் பெப்ரவரி மாதம் மீண்டும் இலங்கைக்கு வரும்போது இவ்விடயம் பற்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கலந்துரையாடுவதாகத் தெரிவித்தார்.

(01)

## மீள்குடி..

இக்கூட்டத்தில் உலக வங்கியின் தெற்காசியப் பிரிவுத் தலைவர் மீகோ நிஷிமிசு, இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் கரோல், மற்றும் நரேஷ் துரைச்சாமி, ஆகியோருடன - யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம், உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதி DR.சிவராஜா ஆகியோருடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கடந்தகால யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த மக்கள், தற்போது தமது சொந்த இடத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கும் இந்நிலையில், அவர்களுக்கு உடனடி உதவிகளாக எவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி இக்கூட்டத்தின்போது ஆராயப்பட்டது.

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுத் திணைக்களத்தில் உதவிக் கணக்காய்வாளராக கடமையாற்றும் அனைத்து ஊழியருக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளைக் காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## தமிழக அகதிகள் 34 பேர் விமானம் மூலம் வந்தன[illegible]

தமிழக அகதிமுகாமில் இருந்து 11 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேர் விமானம் மூலம் நேற்று இலங்கை வந்தனர்.

இவர்களுக்குரிய பயண ஆவணங்களை சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் வழங்கியுள்ளது.

விமானச் சீட்டுக்களை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினர் வழங்கினர்.


# Vacancies

We have career opportunities in the following positions for ideal candidates who are enegetic, dynamic and result oriented

1. **MANAGER** (Able to handle In bound & out bound passengers, Cargo, Local & overseas ticketing and manage the travel agent with fluency in three languages)
2. **STATION MANAGER** (Ability to handle the domestic airline)
3. **ASSISTANT MANAGER**
4. **SALES MANAGER**
5. **TICKETING OFFICER**
6. **ACCOUNTS CLERK**
7. **FIELD OFFICER**
8. **SECURITY GUARD**
9. **DRIVER**
10. **TECHNICIAN**
11. **STORE KEEPER**

Please forward your applications along with a detailed curriculum vitae to reach us within 7 days of this advertisement.

Human Resource Manager,
THAMPI AIR TOURS(PTE) Ltd
90, Kanthappasegaram Road,
Jaffna.

A MEMBER OF THAMPI HOLDINGS (PTE) LTD.

(சி-515)



# தென்னிந்தியாவில் இருந்து



முதல் முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

**ராஜகுருசாமி** அவர்கள்

☆ கைரேகை ☆ ஜாதகம் ☆ எண்கணிதம்
☆ பெயர்ராசி ☆ திருமணப் பொருத்தம்
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

**ராஜகுருசாமி**, மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1(112), TEMPLE ROAD (Near ICRC),JAFFNA.

(சி-514)


இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.